## சாலைப் பயணங்களை கவனமுடன் மேற்கொள்வீர்!

# ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித் தொகை - இதயம் கனக்கிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 11-

“ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித் தொகை கொடுத்த போது இதயம் கனக்கிறது, உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்குத் துணையிருப்போம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்குத் துணையிருப்போம்!**

**ஓராண்டில் 22 குடும்பங்களுக்கு உதவித்தொகை கொடுத்த போது இதயம் கனக்கிறது.**

**உடன்பிறப்புகளே... உங்கள் ஒவ்வொருவருக்கும் – உங்கள் குடும்பத்திற்கும் துணை நிற்க வேண்டியது கழகத்தின் கடமை! ஆனால், அதைவிடப் பெருங்கடமையாக நான் கருதுவது: சாலைப் பயணங்களை நீங்கள் கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.**

**உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் மீது நானும்,உங்கள் குடும்பத்தினரும் வைத்துள்ள நம்பிக்கையைக் காத்து நலமுடன் வாழ வேண்டும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### குளச்சல் வாணியக்குடி

# மீன்பிடி துறைமுகப் பணியை உடனே தொடங்கிடுக!

## ஆஸ்டின் எம்.எல்.ஏ. தமிழ்நாடு அரசுக்குக் கோரிக்கை!



நாகர்கோவில், ஜூன் 11 -

கழகத் தலைவர் மு க ஸ்டாலினால் ரூபாய் 300 கோடி நிதி ஒதுக்கப்பட்ட குளச்சல் வாணியக்குடி மீன்பிடி துறைமுக பணியை உடனடி தொடங்க வேண்டுமென தமிழக மீன்வளத்துறை அமைச்சருக்கு நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின்கோரிக்கைவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கோரிக்கையில் கடந்த 8.6.2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து மீன்வளத்துறை அமைச்சர் தலைமையில் மீனவர் களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும்விழா மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மீன் வளத்துறைஇயக்குனர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலானஆட்சியில் மீனவர் களுக்கான தடைக்கால நிவாரண நிதி ரூ.5000 லிருந்து ரூ.8000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

தற்போது அரசு கடந்த தேர்தல் அறிக்கையில் அதை 20 ஆயிரம் .ஆக உயர்த்தஇருப்பதாக அறிவித்தது. அந்த வாக்குறுதியின் அடிப்படையில் மீனவர் களுக்கு 20000 ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கடந்த ஆட்சி காலத்தில் அழிக்கால் மீனவர் கிராமத்தை தூண்டி வளைவு அமைப்பதற்காக பணி மேற்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு ஆய்வு பணியும் முடிந்தது அதனுடைய அறிக்கையும் அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டது .

ஆகவே வரக்கூடிய பட்ஜெட்டில் அழிக்கால் மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் குளச்சல் மீன் பிடி துறைமுக விரிவாக்க பணிக்கு ரூபாய் 150 கோடியும் வாணியக்குடி புதிய மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கு ரூபாய் 150 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு மாதங்கள் ஆகியும் அந்த பணி தொடங்கப்படவில்லை .

எனவே உடனடியாக அந்த பணிகளை தொடங்க வேண்டும் எனவும் கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படுகின்ற போது உடனடியாக அவர்களை மீட்கும் வகையில் கடல் ஆம்புலன்ஸ் வசதி செய்து தர வேண்டும் எனவும் பெரிய அளவிலான இயந்திரப் படகுகளை பதிவு செய்வதற்கு 240 hp மோட்டார் மற்றும் 24 அடி நீளம் இருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்தி பதிவு செய்ய தயாராக இருக்கும் சுமார் 700 இயந்திர படகுகளை பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட குமரி மாவட்ட மீனவர் நலன் காக்கும் பல்வேறு கோரிக்கைகளை கூட்டத் தில் வாயிலாக கோரிக்கையாக கொடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் பெஞ்ஜமினுக்கு வாழ்த்துகள்!

# அண்ணா உருவாக்கிய தாய்க் கழகத்திற்கு திரும்பி வரும் அனைவரையும் வரவேற்கிறேன்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 11–


அண்ணா உருவாக்கிய தாய்க் கழகத்திற்குத் திரும்பி வரும் அனைவரையும் வரவேற்கிறேன் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு

**அண்ணா உருவாக்கிய தாய்க்கழகத்திற்குத் திரும்பி வரும் அனைவரையும் வரவேற்கிறேன்!**

**முன்னாள் அமைச்சர் திரு.பென்ஜமின் அவர்களுக்கு வாழ்த்துகள்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் நகரம் பட்டியில் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் கே ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் வாரிசு தாரர்கள் கலந்து கொண்டார்கள்.

### டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் தலைமை!

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில், கலைஞர் புத்தெழுச்சி நாள் புகழரங்கம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி – ஈரோடு இறைவன் – கரூர் முரளி வாழ்த்துரை!

சென்னை,ஜூன்.11-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், அம்பத்தூர் கிழக்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்- புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு “புத்தெழுச்சி-13”, “முதன்மைக்கு முதன்மையானவர்!! முத்தமிழன் இதயமானவர்!!” எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 12/06/2026, வெள்ளிக்க்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர் ஓ.டி. பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்பி சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுதி செயலாளர்கள் பி.கே.மூர்த்தி .எம்.சி,டிஎஸ்பி ராஜகோபால்.எம்.சி, எம் டி ஆர் நாகராஜ்,டாக்டர் ஏ பி பூர்ணிமா.எம்.சி,

வி.ரமேஷ் (எ) நீல கண்டன். எம்.சி,எல்பி எஃப் மோகன், டாக்டர் ஜி சாந்தகுமாரி.எம்.சி,உஷா நாகராஜ். எம்.சி, ஜெ.பாலமுருகன் கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி.எம்.சி , ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

க முரளி பாபு, அ.செல்வம், க.கதீஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன், பு.வீரா( எ) வீரராகவன், வெ. இராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம் கமல், க.பொற்கொடி எம் சி ,எம் இ.சேகர் எம் சி, எஸ். உமா சந்தானம் எம்.சி, உஷா நாகராஜ் எம் சி, பி.வி.மூர்த்தி வெ.பொன்நவராஜ் ரவி, க.ஜீவா, எஸ் பி .அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி,எம் ஹரி கிருஷ்ணன் ,எம் குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண் , கோ சேகர் லால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ லியோனி கழக இலக்கிய அணி இணைச் செயலாளர்.ஈரோடு இறைவன் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில்,மேயர் பிரியா ராஜன், சன்.முனியாண்டி, மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன் கே.எஸ்.இரவிச்சந்திரன் கே.சந்துரு சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன் தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி வே.உமாகாந்த் கே.எஸ்.எம். நாதன் பரிதிஇளம்சுருதி எம்.சி.ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் புனிதவதி எத்திராசன் எம்.சி.,இசட்.ஆசாத், மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் எம்.சி.ஃபி.ஸ்ரீ ராமுலு, சரிதாமகேஷ்குமார் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு ஐ.சி. எப்.வ.முரளிதரன் எ.நாகராசன்எம்.சி.சொ.வேலு வி.சுதாகர் எம்.சாமிகண்ணு செ. தமிழ்வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி.பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர்செல்வம் டி.வி. செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரி வீரராகவன் அ.நிர்மலாதேவி, எம் இப்ராஹிம் கனி இராகலைச் செல்வி மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் மு.இரகு நன்றி கூறுகிறார்.

### கேபிள் டிவி எம்.ராஜா ஏற்பாடு ! தி.மு.தனியரசு தலைமை !

# 13வது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் நலஉதவிகள் ! நீர் மோர் பந்தல் திறப்பு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் துவக்கி வைக்கிறார் ! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - பங்கேற்பு!

சென்னை, ஜூன்.11

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் நீர்மோர், இளநீர், தர்பூசணி வழங்கும் நிகழ்ச்சி இன்று (11.06.2026 வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் எம்ஜிஆர் சாலை மீன் மார்க்கெட் அருகில் சாத்தாங்காடு திருவொற்றியூர் செ19ல் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை வட்டச்செயலாளர் கேபிள்டிவி எம்.ராஜா, செய்துள்ளார்.திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளரும் 1வது மண்டலக்குழுத் தலைவர் தி.மு.தனியரசு, தலைமை வகிக்கிறார். குறிஞ்சி எஸ். கணேசன், ஆர்.சி.ஆசைத்தம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன்,

டி.ஏ.ராஜி, ஆர்.ரஜினி பாபு, கே.கார்த்திகேயன், எ.மதிவாணன், எஸ்.முத்துராஜ், கே.ஜானகிராமன், எஸ். விஜயலட்சுமி, ராஜன்சாமிநாதன், எம்.மனோகரன், எ.சுந்தர்ராஜ், டி.எஸ்.பிரசாத், டி.கதிரவன், ஜி.நடராஜன், வே.இளங்கோவன், டி.சிவரஞ்சனி, வி.பன்னீர்செல்வம், கே.டி.ஆர்.பாலமுருகன், பி. சரவணகுமார், எம்.சந்திரசேகர், மு.செல்வம், எம்.எஸ். மணி, டி.கே.அசோகன், ஆர். ரவிச்சந்திரன், என்.ஆர்.கபிலன், எஸ்.கே.நீதி, பி.தனசேகரன், இ.மகேஷ், எஸ்.ராஜேஷ், பி.சங்கர், என்.ஹரினி, து.மோனிஷா, ஜானிதேவா, ரா. மாணிக்கம், து.சௌந்தர்யா, எம்.செல்வம், எ.தங்கமணி, எஸ்.அன்பழகன், கெ.எஸ்.ராஜேந்திரன், எஸ். சங்கர், டி.பாஸ்கரன், எஸ். முரளிதரன், ஜெ.கருணாநிதி, கே.எஸ்.ஆனந்தன், எஸ். அருள், எம்.ரகுநாத், பி.ராமராஜ், கெ.ஜெயகுமார், எஸ். ராஜேந்திரகுமார், இ.எம். சாமி, பேப்பர் கணேசன், டி. இளங்கோவன், ஆர்.ரவிச்சந்திரன், கே.மணிகண்டன், எஸ்.சதிஷ்குமார், எஸ்.பிரவீன், சி.தமிழரசன், எஸ். தனுஷ்குமார், எஸ்.தமிழ்செல்வன், வி. புஷ்பராஜ், பி. பால்ராஜ், எம்.தினேஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

# “முதல் மரியாதைக்கு” இறுதி மரியாதை!



பிதாமகனே
போய்விட்டாயா?
கிராமத்து ராஜாவே
இறந்துபட்டாயா?

எங்கள்
மண் வாசனையில்
இன்று சாவு மணக்கிறதா?

அடைத்துக் கிடந்த
திரையுலகக் கதவுகளைத்
திறந்தவெளிக்குத்
திறந்துவிட்டவனே!

ஆகாயத்திற்கு அடுத்து
அதிக நட்சத்திரங்களை
அறிமுகம் செய்தவனே!

என்னையும்
சுயமரியாதையோடு
சுடரொளி வீசச்செய்தவனே!

உடன்பிறப்பே
ரத்தத்தின் ரத்தமே என்ற
தலைவர்களின் மொழிக்கு இணையாக
என் இனிய தமிழ்மக்களே
என்ற ரத்தினச் சொற்களுக்கு
முத்திரை சேர்த்தவனே!

நீ மாயக்காரன்
புழுதியைப் பொன்செய்தாய்

சினிமாவின் நிறம்
வெள்ளையென்று இருந்ததை
கருப்பென்று மாற்றிய
கலையாளன் நீ!

இடிந்த சுவர்களும்
உடைந்த மனிதர்களும்
கிழிந்த வாழ்க்கையும்
உன் கலையின் கச்சாப் பொருட்கள்

இந்தக் கரட்டுப்பட்டியைத்
தில்லி நகரத்திற்கு கொண்டுசேர்த்த
அல்லிநகரத்து அரசன் நீ

இனி நான் எப்படித்
தனியாகத் தேனி போவேன்?

மேற்குத் தொடர்ச்சி மலை
அருவிகளால் அழுதுகொண்டே கேட்குமே...
எங்கே பாரதிராஜா?

கத்தாழங்காட்டுக்
கரிச்சான் கேட்குமே...
எங்கே பாரதிராஜா?

கருவேலமரம் கேட்குமே
எங்கே பாரதிராஜா?

என்ன பதில் சொல்வேன்?
எப்படிநான் தனித்திருப்பேன்?

நீ தூரிகை
நான் வண்ணம்
நான் தூரிகை
நீ வண்ணம்

தூரிகை இல்லாமல் வண்ணமும்
வண்ணம் இல்லாமல் தூரிகையும்
என்னத்துக்காகும்?

நீ அரிவாள்
நான் கைப்பிடி
நான் அரிவாள்
நீ கைப்பிடி

அரிவாள் இல்லாத கைப்பிடியும்
கைப்பிடி இல்லாத அரிவாளும்
என்னத்துக்காகும்?

என்னை அழவிடு
உடம்பின் உப்பெல்லாம்
கண்ணீராய்க் கரையட்டும்

இனி என்ன எழுத?
நடிகர் திலகம் போல்
நானும் புலம்புகிறேன்

‘பூங்காத்து திரும்புமா?
எம் பாட்ட விரும்புமா?
பாராட்ட - மடியில் வச்சுத் தாலாட்ட
எனக்கொரு தாய்மடி கிடைக்குமா?’

முதல் மரியாதை செய்தவனே
உனக்கென் இறுதி மரியாதை!



கவிப்பேரரசு
வைரமுத்து